# யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூன்- 2015
## Term Examination, June - 2015

| தரம் :- 13 (2015) | பொருளியல் - II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

அறிவுறுத்தல்

- ❖ **உபபிரிவு 'அ' உபபிரிவு 'ஆ' ஆகியவற்றில் இருந்து குறைந்தபட்சம் இரு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**உபபிரிவு - 'அ'**

**(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் இரு வினாக்களைத் தெரிவு செய்க)**

*01)*

i) பொருளியலில் நேர்செலவு என்றால் என்ன? இதற்கு மேலதிகமாக நிறுவனத்தின் செலவுகளாக எவற்றைக் கருதுவீர்? *(4 புள்ளிகள்)*

ii) பொருளியல் ரீதியாக அமையச் செலவு எனும் எண்ணக்கருவை விளக்குக. அது பற்றாக்குறையான வளங்களை மாற்றுப் பயன்பாடுகளுக்கிடையே ஒதுக்கீடு செய்வதில் எவ்வாறு தொடர்புபடுகின்றது என்பதை விளக்குக. *(4 புள்ளிகள்)*

iii) உற்பத்தி சாத்திய வளையி ஒன்றில் அதிகரிக்கும் அமையச்செலவு ஏன் தோன்றுகின்றது? *(4 புள்ளிகள்)*

iv) கிடையச்சில் மருத்துவ உபகரணங்களையும் நிலைக்குத்தச்சில் கல்வி உபகரணங்களையும் அதிகரிக்கும் அமையச் செலவுடைய உற்பத்தி சாத்திய வளையியின் A புள்ளியில் உற்பத்தி செய்யும் பொருளாதாரம் ஒன்றைக் கருதுக.

அ) உற்பத்தி சாத்திய வளை கோட்டினை வரைக. *(2 புள்ளிகள்)*

➢ **பின்வருவனவற்றை அவ்வளை கோட்டில் காட்டுக.**

ஆ) மருத்துவ உபகரணங்களுக்கான கேள்வி உயர்வினால் அப்பொருள் நோக்கி வளங்கள் அதிகரிப்பதனைக் காட்டும் B புள்ளி. *(2 புள்ளிகள்)*

இ) சனத்தொகை வயதுக்கட்டமைப்பு மாற்றம் காரணமாக சிறுவர்களின் ஒரு தொகையினர் ஊழியப்படையில் இணைதல் *(2 புள்ளிகள்)*


ஈ) இரு பொருள் உற்பத்திகளிலும் முன்னேற்றமான ஆனால் வேறுபட்ட தொழில்நுட்பம் புகுத்தப்படுதல். *(2 புள்ளிகள்)*

*02)*

i) தாராள சந்தைப் பொருளாதாரமொன்றிலே அரச தலையீட்டிற்கான காரணங்களை பட்டியற்படுத்துக. *(4 புள்ளிகள்)*

ii) தாராள சந்தைப் பொருளாதாரத்தில் "அதிகரித்துச் செல்லும் வெளியீடுகள் மத்தியிலும் பிளாஸ்ரிக் பொருட்களின் விலைகள் அதிகரித்துச் செல்கின்றன" பொருத்தமான வரைபடம் ஒன்றின் மூலம் இந்நிலமையினை விளக்குக. *(4 புள்ளிகள்)*

iii) பின்வரும் வரைபடத்தைப் பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக




1) கட்டுப்பாட்டு விலைக்கு முன் சமநிலையில் நுகர்வோர் உற்பத்தியாளர் மிகையினை காட்டும் பிரதேசம் யாது? (2 புள்ளிகள்)

2) கட்டுப்பாட்டு விலையின் பின்னர் நுகர்வோர் மிகை உற்பத்தியாளர் மிகையினை காட்டும் பிரதேசம் யாது? (2 புள்ளிகள்)

3) கட்டுப்பாட்டு விலை காரணமாக ஏற்படும் மிகை நிரம்பலினை அரசு கொள்வனவு செய்யுமாயின் அரசின் கொள்வனவுச் செலவைக் குறிக்கும் பிரதேசம் யாது? (2 புள்ளிகள்)

4) அரசு மிகை நிரம்பலைக் கொள்வனவு செய்வதனால் ஏற்படும் சமூகநல இழப்பைக் காட்டும் பிரதேசம் யாது? (2 புள்ளிகள்)

5) அரசு மிகை நிரம்பலை கொள்வனவு செய்வதற்குப் பதிலாக குறை நிரப்புக் கொடுப்பனவை வழங்குமாயின் அலகுக்கான குறை நிரப்புக் கொடுப்பனவு மற்றும் மொத்தக் குறை நிரப்புக் கொடுப்பனவை குறிக்கும் பகுதி எது? (2 புள்ளிகள்)

6) குறை நிரப்புக் கொடுப்பனவை அரசு வழங்குமாயின் சந்தையில் நுகர்வோன் செலுத்திய விலை யாது? சமூகநல இழப்பைக் குறிக்கும் பிரதேசம் யாது? (2 புள்ளிகள்)

03)

i) குறுங்கால உற்பத்தி செயன்முறையின் போது ஆரம்பத்தில் எல்லைச் செலவு சராசரிச் செலவு என்பன வீழ்ச்சியடைவது ஏன்? விளக்குக. (3 புள்ளிகள்)

ii) பொருளியலாளர்களால் சாதாரண இலாபம் உற்பத்திச் செலவுகளில் ஒன்றாகக் கருதப்படும் அதேவேளை பொருளியல் இலாபம் செலவாகக் கொள்ளப்படாதது ஏன், விளக்குக. (5 புள்ளிகள்)

iii) சிலருரிமைச் சந்தைக்கு உதாரணம் தந்து அதன் இயல்புகளைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iv) $x$ பண்டத்தை உற்பத்தி செய்யும் நிறுவனமொன்றின் மொத்தச் செலவு, வெளியீடு தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| வெளியீடு (Q) | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்தச் செலவு (TC) | 30 | 60 | 80 | 96 | 120 | 160 | 216 | 280 |

1) எந்த உற்பத்தி மட்டத்தில் குறுங்கால எல்லைச் செலவு வளையி அதி தாழ்ந்த புள்ளியல் இருக்கும்? (3 புள்ளிகள்)

2) நிறுவனத்தின் ஐந்தாவது அலகு வெளியீட்டின் போது சராசரி மாறும் செலவு யாது? (2 புள்ளிகள்)

3) 7ம் அலகு வெளியீட்டின் போது நிறுவனத்தின் அலகுக்கான அசாதாரண இலாபம் யாது? (3 புள்ளிகள்)

04)

i) பொருளாதாரமொன்றின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவுடன் எத்தகைய சீராக்கங்களை மேற்கொள்வதன் மூலம் பின்வரும் பெறுமதிகளை கணிப்பிடமுடியும்?

1) சந்தை விலையிலான மொத்த தேசிய உற்பத்தி (1 புள்ளி)

2) தேறிய உள்நாட்டு உற்பத்தி (1 புள்ளி)

3) தேசிய வருமானம் (3 புள்ளிகள்)

4) மொத்த உள்நாட்டு சேமிப்பு (2 புள்ளிகள்)

ii) மொத்த கேள்வியில் (AD) இடம்பெறும் ''நுகர்வுச் செலவீடு'' என்பதனை விளக்குக. நுகர்வுச் செலவீட்டின் மூன்று பிரிவுகளும் எவை? (5 புள்ளிகள்)

iii) கருதுகோள் ரீதியிலான பொருளாதாரமொன்றின் ஒருவருட கால பகுதிக்குரிய தகவல்கள் பின்வருமாறு தரப்படுகின்றன.

| வகை | தொகை மில்லியன் |
|---|---|
| தனியார் நுகர்வுச் செலவீடு | 1300 |
| பெறுமானத் தேய்வு | 200 |
| மொத்த உள்நாட்டுச் சேமிப்பு | 2000 |
| அரசாங்க கொள்வனவு | 800 |
| தேறிய முதலீடு | 1000 |
| தேறிய உள்வரும் வெளிநாட்டு காரணி வருவாய் | 400 |
| தேறிய வெளிநாட்டு மாறல்கள் | 500 |

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

1) சந்தை விலை மொத்த உள்நாட்டுற்பத்தி (2 புள்ளிகள்)

2) மொத்தத் தேசிய உற்பத்தி மீதான செலவு (2 புள்ளிகள்)

3) செலவிடத்தகு தேசிய உற்பத்தி (2 புள்ளிகள்)

4) தேசிய சேமிப்பு (2 புள்ளிகள்)

05)

i) எல்லை நுகர்வு நாட்டம் (MPC) முதலீட்டுப் பெருக்கி (K) என்பவற்றிற்கிடையிலான தொடர்பினை விளக்குக. (4 புள்ளிகள்)

ii) ஓர் எளிய பொருளாதாரமொன்றில் தேசிய வருமானச் சமநிலை நிர்ணயிக்கப்படும் முறையினை வரிப்பட உதவியுடன் விளக்குக. (4 புள்ளிகள்)

iii) பொருளாதாரமொன்றின் பிரதான பொருளாதார இயக்கிகள் யாவை? (4 புள்ளிகள்)

iv) திறந்த பொருளாதாரமொன்றில் குறிப்பிட்ட காலப்பகுதியில் முதலீடுகள் 150 மில்லியனாகவும், வரிகள் 100 மில்லியனாகவும் அரசாங்க செலவுகள் 60 மில்லியனாகவும் தேறிய ஏற்றுமதிகள் 50 மில்லியனாகவும் நுகர்வு $C = 50 + 0.6\,yd$ எனவும் தரப்படுகின்றது.

1) அரசு வருமானம் மாற்றமடையாத நிலையில் முதலீட்டினை மேலும் 100 மில்லியனால் அதிகரிக்க எண்ணுகின்றது எனின் எவ்வளவு வரியினை விதித்தல் வேண்டும்? (5 புள்ளிகள்)

2) பொருளாதாரமொன்றில் எல்லை சேமிப்பு நாட்டம் (mps) 0.4 எனின் அரசாங்கச் செலவினை 200 மில்லியனால் அதிகரிக்கும்போது நுகர்ச்சி எவ்வளவால் அதிகரிக்கும்? (3 புள்ளிகள்)

**உபபிரிவு - 'ஆ'**

**(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் இரு வினாக்களைத் தெரிவு செய்க)**

06)

i) பணம், அண்மிய பணம் மற்றும் பணப்பதிலீடு ஆகியவற்றை வேறுபடுத்துக. (5 புள்ளிகள்)

ii) பொருளாதாரமொன்றின் பண நிரம்பலில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு பணத்திற்கான உத்தேச நோக்க கேள்வியில் ஏதாவது தாக்கத்தை விளைவிக்குமா? விளக்குக. (4 புள்ளிகள்)

iii) விரிந்த பணநிரம்பலை ($M_2$) நிச்சயிப்பதில் செல்வாக்குடைய காரணிகள் யாவை? (4 புள்ளிகள்)

iv) பொருளாதாரமொன்றின் தரவுகள் கீழே தரப்படுகின்றன.

| வகை | தொகை மில்லியன் |
|---|---|
| உயர் வலுப்பணம் | 400 |
| வணிக வங்கிகளில் உள்ள நாணயம் | 125 |
| அரசின் காசு மீதி | 100 |
| வணிக வங்கியிலுள்ள பொது மக்களது கேள்வி மற்றும் தவணை சேமிப்பு வைப்புக்கள் | 600 |
| வணிக வங்கியிலுள்ள தவணை சேமிப்பு வைப்புக்கள் | 200 |
| மத்திய வங்கியிலுள்ள வணிக வங்கி வைப்பு | 075 |

1) $M_1$ பண நிரம்பல் மட்டம் யாது? (3 புள்ளிகள்)

2) $M_1$ பணப் பெருக்கிக் குணகம் யாது? (2 புள்ளிகள்)

3) மத்திய வங்கி வணிக வங்கிகளிடமிருந்து 50 மில்லியன் ரூபா பெறுமதியான ஆவணங்களைக் கொள்வனவு செய்யுமாயின் புதிய $M_1$ பண நிரம்பல் மட்டம் யாது? (2 புள்ளிகள்)

07)

i) அரச தோல்வி என்பது யாது? அரச தோல்வி ஏற்படுவதற்குரிய காரணங்கள் யாவை? (5 புள்ளிகள்)

ii) சந்தை முறைமையானது கல்விச் சேவையினை வழங்குவதில் சமூக ரீதியாக விரும்பப்படும் அளவை விட குறைவான அளவினை உற்பத்தி செய்து வழங்குவது ஏன்? பொருத்தமான வரைபடத்தை பயன்படுத்தி விளக்குக. (5 புள்ளிகள்)

iii) பொருளாதாரமொன்றின் மொத்தக் கேள்வியில் தாக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் அரசு இறைக்கொள்கையினைப் பயன்படுத்தி எவ்வாறு பொருளாதார உறுதிநிலையை ஏற்படுத்த முடியுமென விளக்குக. (5 புள்ளிகள்)

iv) பொதுப்பண்டம் எள்றால் என்ன? இங்கு "இலவச சவாரிப் பிரச்சினை" என்பதனை விளக்குக. (5 புள்ளிகள்)

08) ஐக்கிய அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகள் ஓர் அலகு உழைப்பினைப் பயன்படுத்தி மோட்டார் வாகனம் கணனி ஆகிய பொருட்களை உற்பத்தி செய்யும் நிலமையினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| பண்டம் | ஐக்கிய அமெரிக்கா | கனடா |
|---|---|---|
| மோட்டார் வாகனம் | 6 | 1 |
| கணனி | 3 | 2 |

i) இரு நாடுகளதும் இரு பண்ட உற்பத்தி தொடர்பாகவும் அமையச் செலவுகளைக் கணிக்குக. (4 புள்ளிகள்)

ii) அமெரிக்காவிடம் 10 அலகு காரணிகளும் கனடாவிடம் 20 அலகு காரணிகளும் உண்டெனக் கருதுக. இரு நாடுகளதும் உற்பத்தி சாத்திய வளையிகளை வரைக. (4 புள்ளிகள்)

iii) இரு நாடுகளும் ஒப்பீட்டு நலனுள்ள பண்டத்தினை மட்டும் உற்பத்தி செய்வதாகவும் ஒரு மோட்டாருக்கு ஒரு கணனி அடிப்படையில் வர்த்தகப் பரிமாற்றம் நிகழுவதாகவும் கருதுக. இரு நாடுகளதும் நுகர்வு சாத்திய வளை கோட்டை வரைக. (4 புள்ளிகள்)

iv) மெய் நாணயமாற்று வீதம், மெய்ப் பயனுறுதி வாய்ந்த நாணய மாற்றுவீதம் ஆகியவற்றை வேறுபடுத்துக. (4 புள்ளிகள்)

v) இலங்கையின் ஏற்றுமதி இறக்குமதி கட்டமைப்பின் அண்மைக்காலப் போக்கினைப் பரிசீலிக்குக. (4 புள்ளிகள்)

09)

i) பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் இடையிலான வேறுபாட்டினை விளக்குக. (5 புள்ளிகள்)

ii) பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதில் அரசினது வகிபாகம் யாது? (5 புள்ளிகள்)

iii) “நல்லாட்சி” ஒன்றின் சிறப்புப் பண்புகளாக எவற்றைக் கருதுவீர்? (5 புள்ளிகள்)

iv) பொருளாதார வளர்ச்சிச் சவாலை சிறப்பாக வெற்றி கொள்வதற்கு வளர்ச்சி ஆணைச்சபை அறிக்கையிட்டுள்ள ஐந்து விடயங்களும் எவை? (5 புள்ளிகள்)

10)

i) வறுமையின் சமூக பொருளாதார விளைவுகள் எவை? (5 புள்ளிகள்)

ii) சார்பு ரீதியில் கிராமிய மட்டத்தில் வறுமை அதிகமாக இருப்பதற்குரிய காரணங்கள் எவை? பிராந்திய வேறுபாடுகளை குறைப்பதற்கு அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை? (5 புள்ளிகள்)

iii) இலங்கையின் சனத்தொகைக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் யாவை? (5 புள்ளிகள்)

iv) இலங்கையின் சனத்தொகை நிலைமாற்றத்தின் பொருளாதார விளைவுகளை சுருக்கமாக பரிசீலிக்குக. (5 புள்ளிகள்)